Reg. No. 011227

# அரையாண்டு பொதுத் தேர்வு, டிசம்பர் - 2017

மேல்நிலை முதலாமாண்டு] **பொதுத்தமிழ் – முதல் தாள்** [காலம் : 2.30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 90)

பகுதி - I

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 20×1=20

1. தாயுமானவர் ஆற்றிய பணி
   அ) அமைச்சர் ஆ) படைத்தலைவர் இ) அரசுக் கணக்கர்
2. பாரதி மொழிபெயர்த்த நூல்
   அ) இராமாயணம் ஆ) பாரதம் இ) கீதை
3. கான மஞ்சைக்குக் கலிங்கம் ஈந்தவன்
   அ) பாரி ஆ) காரி இ) பேகன்
4. குருளை என்பதன் பொருள் யாது ?
   அ) குட்டி ஆ) பெண் இ) நகம்
5. குறள் என்பது
   அ) இரண்டடி வெண்பா ஆ) நான்கடி வெண்பா இ) மூன்றடி வெண்பா
6. அடக்கம் ------ உய்க்கும்
   அ) மேலோகத்துள் ஆ) அமரருள் இ) பூலோகத்துள்
7. சீவகனின் தாய்
   அ) விசயை ஆ) வீணாபதி இ) தத்தை
8. சீறிச்சீறி - இலக்கணக் குறிப்பு
   அ) அடுக்குத் தொடர் ஆ) வினைத்தொகை இ) பண்புத் தொகை
9. மனோன்மணீயத்தை இயற்றியவர்
   அ) சுந்தரம் பிள்ளை ஆ) சுந்தர முனிவர் இ) சுந்தரர்
10. இசையின் உருவகமாக பாரதியார் குறிப்பிடும் பறவை
    அ) மயில் ஆ) குயில் இ) அன்னம்
11. போர் முனையில் ஆயிரம் யானைகளை வென்ற வீரரைப் பாடுவது
    அ) தூது ஆ) பரணி இ) உலா
12. குமரகுருபரர் பிறந்த ஊர்
    அ) திருவைகுண்டம் ஆ) திருவாதவூர் இ) திருவாமூர்
13. பாரதிதாசனின் இயற்பெயர்
    அ) எத்திராசலு ஆ) முத்தையா இ) கனகசுப்புரத்தினம்
14. மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என்று பாடியவர்
    அ) கண்ணதாசன் ஆ) முடியரசன் இ) வாணிதாசன்
15. கிள்ளைவிடு தூதில் உள்ள கண்ணிகள்
    அ) 269 ஆ) 239 இ) 293
16. தமிழில் முதலில் எழுந்த பரணி
    அ) தக்கயாகப் பரணி ஆ) கலிங்கத்துப் பரணி இ) வங்கத்துப் பரணி
17. அறத்துப் பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
    அ) 38 ஆ) 70 இ) 25
18. ஓங்கு மலை - இலக்கணக் குறிப்பு
    அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) அடுக்குத் தொடர்
19. திருக்குறளின் பெருமையை உணர்த்தும் நூல் எது ?
    அ) பழமொழி நானூறு ஆ) திருவள்ளுவ மாலை இ) ஏலாதி
20. களிற்றுயானை நிரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை
    அ) 100 ஆ) 120 இ) 180

திருப்புக

## பகுதி-II

பின்வரும் வினாக்களுள் வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 21 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக : 7×2=14

21. எட்டுத் தொகை நூல்கள் யாவை ?
22. அமரருள் உய்ப்பது எது ?
23. பிரித்து எழுதி, பகுபத உறுப்பிலக்கணம் தருக : 1. அசைத்த 2. ஆடுக
24. "அடக்கம்" எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.
25. திருத்தக்கத் தேவர் புனைந்த வேறொரு நூல் யாது ?
26. சீறாப்புராணம் என்ற தொடரின் பொருள் யாது ?
27. புகழின் காயம் எது ?
28. பிள்ளைத்தமிழ் இலக்கணம் எழுதுக.
29. பாரதியார் நடத்திய இதழ்கள் யாவை ?
30. "செயல்" என முடியும் குறட்பாவை அடிமாறாமல் எழுதுக.

## பகுதி-III

பின்வரும் வினாக்களுள் வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 31 முதல் 39 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக : 7×3=21

31. பாரதத்தாயின் பெருமைகளைப் பாரதியார் எவ்வாறு புகழ்ந்துரைத்துள்ளார் ?
32. நிரம்பா நீளிடை எத்தகையது ?
33. ஒப்புரவாளனது செல்வம் பயன்படுமாறு எங்ஙனம் ?
34. பாம்பு அபூபக்கரைத் தீண்டியது ஏன் ?
35. பிறந்தார் எனப்படாதார் யார் ?
36. கலிங்க நாட்டில் தப்பிப் பிழைத்தன யாவை ?
37. தளை என்னும் பாடல் மூலம் கவிஞர் உணர்த்த விரும்பும் செய்தியை எழுதுக.
38. ஆடுக செங்கீரை என்று குமரகுருபரர் வேண்டுமாறு யாங்ஙனம் ?
39. தூது இலக்கியத்தின் இலக்கணம் எழுதுக.
40. புணர்ச்சி விதி தருக : 1. செம்மலர் 2. உறுமிடம்

www.Padasalai.Net

## பகுதி-IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக : 7×5=35

41. அடக்கத்தின் சிறப்பு குறித்து வள்ளுவர் கூறியன யாவை ? (அல்லது)
    வலியறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
42. உவமை அணி இலக்கணம் கூறி சான்றுடன் விளக்குக. (அல்லது)
    வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.
43. சீவகன் யாழின்பால் கண்ட குற்றங்கள் யாவை ? (அல்லது)
    செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியவற்றை எழுதுக.
44. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக. (அல்லது)
    அபூபக்கருடைய அன்பின் ஆற்றலையும் நபிகள் பெருமான் அவரை நஞ்சு தீர்த்தருளியதையும் விளக்கி வரைக.
45. இயன்மொழித் துறையை - சான்றுடன் பொருத்தி எழுதுக. (அல்லது)
    படைவீரரை நோக்கி ஜீவகன் உரைத்த வீரவுரையைத் தொகுத்தெழுதுக.
46. நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டுக்களாகப் பாரதியார் எவற்றைக் குறிப்பிடுகிறார் ? (அல்லது)
    எந்நாளோ என்னும் தலைப்பில் கவிஞர் கூறியிருப்பவை யாவை ?
47. "அருள்பழுத்த" எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையைச் சுட்டுக. (அல்லது)
    "கருங்கொடிப் புருவம் ஏறா" எனத் தொடங்கும் பாடலை எழுதி பாவகையைச் சுட்டுக.

---